அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
INTERNATIONAL COUNCIL FOR EDUCATIONAL DEVELOPMENT OF TAMILS

# அரையாண்டுத்தேர்வு 2024/2025

# தமிழ் - ஆண்டு 12

## புலன்மொழி வளத்தேர்வு வாசித்தல்

கலை இலக்கியப் படைப்பாளிகள், குமுக அக்கறையுள்ள செயற்பாட்டாளர்கள், அரசியல் தலைவர்கள் இன்னும் இது போன்ற பல்துறைகளிலும் இயங்கிய பட்டறிவுச் செழுமை கொண்டோரிடம் நேர்காணல் பெறப்பட்டு வெளியிடப்படுவது உலக வழக்கமாகும். செய்தித்தாள், வானொலி, தொலைக்காட்சி போன்றவற்றில் இத்தகைய நேர்காணல்கள் கொடுக்கப்படுகின்றன. இன்று இணையவழியில் நேர்காணல்கள் நிகழ்த்தப்படுவதையும் மின்னிதழ்களில் வெளியிடப்படுவதையும் காண்கின்றோம். பொதுவாக நேர்காணல்கள் நேரடியாகச் சந்தித்து உரையாடற் பாங்கில் பதியப்பட்டு வெளியிடப்படும் வடிவத்துக்கு ஏற்ப, செப்பமிடப்படுவதே மரபாகும். நேர்காணலுக்காகச் செல்பவர், தான் சந்திக்கவுள்ள ஆளுமை குறித்த புரிதல் உள்ளவராக இருப்பது அகத்தியம்; அவரது துறையை அறிந்து கொண்டவராகவும் இருத்தல் வேண்டும். அந்தவகையில், முன்கூட்டியே தயாரித்த கேள்விகளுடன் நேர்காணலைத் தொடங்குவார்கள். அதேவேளை நேர்காணப்படும் ஆளுமை வெளிப்படுத்தும் தகவல்கள், கருத்துகள் என்பனவற்றுக்கு ஏற்ப இடையிட்ட கேள்விகளைக் கேட்கும் ஆற்றல் நேர்காண்பவரிடம் இருப்பதும் அகத்தியமே! இத்தகைய புதிய கேள்வியை முன்வைப்பதன் மூலம் கேட்போர் பல தகவல்களைப் பெற்றுப் பயனடைவர்.